(குறுக்கீடுகள்) காவலர்கள், வெளியேற்றுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) அ.தி.மு.க.வைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக இடையூறு பண்ணுவதால், அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள், உடனே வெளியேற்றுங்கள் அவ்வளவு பேரையும்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியிலிருந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

லாபியில் நின்று இடையூறு பண்ணுகிறார்கள். வெளியேற்றுங்கள். (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஞானசேகரன்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் குறித்து நான் நேற்றைக்கு முன்தினம் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தேன். ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. அது பரிசீலனையில் இருக்கிறது. உட்காருங்கள்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்

முற்பகல் 9-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 26 மற்றும் 27 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 16 முதல் 30 வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். மேற்படி அறிக்கைகள், போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, படியெடுத்த பிரதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பெறும்.

# 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டு முதல் திங்களிலே ஜனவரித் திங்களில் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே சொல்ல விழைகிறேன்.